**கணக்குகளை ஆட்சி செய்யும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்**

இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் நோக்கத்திற்காக, "வங்கி" என்ற சொல் ஹபீப் வங்கி, அதன் வாரிசுகள் மற்றும் மரபுரிமையாளர்களைக் குறிக்கும்.

1.(அ) வங்கியில் கணக்கை ஆரம்பிக்க விரும்பும் வாடிக்கையாளர், கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பிக்க வேண்டும். வாடிக்கையாளர் அவசியமான ஆவணங்கள் சகிதம் அவர் தொடர்பான தகவல்களைச் சமர்ப்பிக்க வேண்டும். இலங்கைப் பிரஜைகளுக்கு அவர்களது புகைப்படம் தாங்கிய தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டு / சாரதி அனுமதிப்பத்திரத்தின் பிரதியும் வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு அவர்களது கடவுச்சீட்டின் பிரதியும் அத்தியாவசியமானதாகும். மேலும், ஏற்கனவே வங்கியில் உள்ள தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு ஆகிய ஆவணங்கள் காலாவதியாகும் போது அவற்றின் புதுப்பிக்கப்பட்ட பிரதிகளை முடிந்தளவு விரைவாக வாடிக்கையாளர் தமது சொந்த வங்கிக் கிளையில் சமர்ப்பிக்க வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு கணக்கிற்கும் ஒரு பிரத்தியேகமான "**கணக்கிலக்கம்**" ஒதுக்கப்படும், அது கணக்கு தொடர்பான அனைத்துக் கடிதங்களிலும், மேலும் பணவைப்பின் போதும் , பணம் மீளப் பெறும் போதும் குறிப்பிடப்படல் வேண்டும்.

2. (அ) இன்னுமொரு ஆள் (ஆட்களுடன்) இணைந்த கூட்டுக்கணக்குகள் நீங்கலாக ஒரு தனிநபர் ஒரு குறித்த கிளையில் ஒவ்வொரு வகைக் கணக்கிலும் தலா ஒரு கணக்கினை, உதாரணம்: சேமிப்புக்கணக்கு, தமது பெயரில் ஆரம்பிக்கலாம்.

(ஆ) சிறுவர்களின் பெயரில் ஆரம்பிக்கப்படும் கணக்குகள் ஒரு பாதுகாவலருடன் இணைந்தே ஆரம்பிக்கப்படும், அவர் கணக்கின் அனைத்து செயற்பாடுகளுக்கும் பொறுப்பாக இருப்பார். சிறுவரின் பெயர் மற்றும் தந்தை , தாய் ,அல்லது நீதிமன்றம் நியமித்த பாதுகாவலரின் பெயருடன் இணைந்ததாகவே சிறுவர் கணக்குகள் ஆரம்பிக்கப்படும். பிள்ளைக்கு 18 வயதாகும்போது அக்கணக்கு மூடப்பட்டு அதிலுள்ள மீதி அவசியமான

நடைமுறைகளைப் பூர்த்தி செய்வதன் ஊடாக புதிதாக ஆரம்பிக்கப்படும் கணக்கிற்கு மாற்றப்படும்.

(இ) இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் வங்கியால் வரையப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளின் படி, ஒவ்வொரு வகைக் கணக்கிலும் இலங்கை ரூபாய் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் வணிக வாடிக்கையாளர்கள் திறக்கக்கூடிய கணக்குகளின் எண்ணிக்கைக்கு உச்ச வரம்பு இல்லை.

3.வாடிக்கையாளர் ஏற்கனவே வங்கியில் கணக்கு வைத்திருந்தால், மேலதிகக் கணக்கைத் திறக்க, அவர் மேலதிக விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்வதுடன் சான்றளிக்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டையின் பிரதியையும் சமர்ப்பிக்க வேண்டும். புதிய கணக்கு தனித்துவமான வாடிக்கையாளர் இலக்கம் ஊடாக ஏற்கனவே உள்ள அவரது கணக்குகளுடன் தொடர்புபடுத்தப்படும்

4.கல்வியறிவில்லாத ஆட்கள் / கை நடுக்கமுள்ள ஆட்கள், இழப்பீட்டுப் படிவத்தினைப் (படிவம் CD-50) பூர்த்தி செய்ய வேண்டும் மற்றும் அடையாளத்தை நிரூபிக்க தமது புகைப்படங்களையும் வழங்க வேண்டும். பணம் எடுப்பதற்கு மட்டும் வங்கிக்கிளைக்கு நேரடியாக வருகை தர வேண்டும். வங்கி அலுவலர்களின் முன்பாக காசோலைகளில் கையொப்பமிட வேண்டும் / விரல் அடையாளம் வைக்க வேண்டும். இருப்பினும் விதிவிலக்காக, வங்கி அலுவலர் முன்னிலையில் ஒப்பமிடும் அல்லது கைவிரல் அடையாளமிடும் வாடிக்கையாளர்களின் கணக்குகளிடையேயான பரிமாற்றல்கள், காசோலைக் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படலாம். காசோலைகளில் வெட்டி எழுதுதல் , தொகைகளில் திருத்தம் செய்தல் என்பவற்றுக்கு அவர்களால் ஒப்பமிடப்பட்டு அல்லது பெருவிரல் அடையாளமிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டால் ஒழிய கல்வியறிவற்ற வாடிக்கையாளர்கள் அதற்குப் பொறுப்பல்ல.

5.(அ) பார்வையற்றவர்களின் பேரில் கணக்கு ஆரம்பிப்பதற்கு (எழுத்தறிவு உள்ள மற்றும் இல்லாத) ஒரு சட்டத்தரணி / பிரசித்த நொத்தாரிசு முன்னிலையில் அனைத்து ஆவணங்களையும் பூர்த்தி செய்து முடிந்தவுடன் தனியாள் /கூட்டுக் கணக்கு (கண் பார்வையும் கல்வியறிவுமுள்ள நபருடன்) தொடங்கப்படலாம். கண் பார்வையும், கல்வியறிவுமுள்ள கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர் கணக்கைத் தனியாகவோ அல்லது கூட்டாகவோ செயற்படுத்த அதிகாரம் பெற்றிருக்க வேண்டும்.

ஆ) கண் பார்வையில்லாத ஆளின் பெயரில் தனிக்கணக்கு ஆரம்பிப்பதாக இருந்தால், பண வைப்புகள்/ பணம் மீளப்பெறுதல் ஆகிய நோக்கங்களுக்கான படிவங்களை பூர்த்தி செய்வதற்காக , எழுத, வாசிக்கத் தெரிந்த ஒரு உதவியாளருடன் அவர்/அவள், வங்கிக்கு நேரடியாக வருகை தரவேண்டும்.

6.(ஆ) அட்டர்ணி கணக்குகள், நீதிமன்றத்தின் உத்தரவின் கீழ் திறக்கப்பட்ட கணக்குகள் போன்ற சிறப்பு வகைக் கணக்குகள், நிறைவேற்றுபவர்கள் மற்றும் நிர்வாகிகள் கணக்குகள் மற்றும் எஸ்க்ரோ கணக்குகள் திறக்கப்படுவது கணக்குத் திறக்கப்படும்போது குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். இலங்கை மத்திய வங்கி தனது அந்நியச் செலாவணியின் பேரில் வகுத்துள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு வதியாதோர் கணக்குகள் உட்பட்டதாக இருக்கும். ஒரு மத்திய கணக்கிற்கு அடிக்கடி பணப்பரிமாற்றல் செய்யுமாறு கூறும் அறிவுரையுடன் கூடிய வசூலிப்புக் கணக்குகள் பொதுவாக '**பண முகாமைத்துவ**” வாடிக்கையாளர்களுக்காக ஆரம்பிக்கப்படும். இத்தகைய வசூல் கணக்குகளிற்கு காசோலைப் புத்தகங்கள் பொதுவாக வழங்கப்படுவதில்லை.

7.(அ) கணக்கு வைத்திருப்பவர் (கள்) மரணிக்குமிடத்து மாற்று ஏற்பாடு ஏதும் இல்லாத பட்சத்தில், எந்தவொரு கணக்கிலும், ஒரு தனிநபரின் பெயரில் உள்ள ஏதேனும் கணக்கு மீதி, இழப்பீட்டுப் பத்திரம்/வாரிசுச் சான்றிதழைப் பெற்ற பிறகு கணக்கு வைத்திருந்த மரணித்தவரின் சட்டபூர்வ வாரிசுகளுக்கு வழங்கப்படும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் பெயரில் கணக்கு இருந்தால், இருப்புத் தொகையானது, இறந்த கணக்கு வைத்திருப்பவரின் சட்டபூர்வ வாரிசுகளுக்கும் மீதமுள்ள கணக்கு வைத்திருப்பவர்களுக்கும் இழப்பீட்டுப்பத்திரம்/வாரிசுச் சான்றிதழ் பெறப்பட்டதன் பின் வழங்கப்படும். கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர் (கள்) மீதமுள்ள அல்லது கணக்கு வைத்திருப்பவர்களில் ஒருவருக்கு கணக்கு மீதியை செலுத்துமாறு அதிகாரம் வழங்கியிருந்தால் ஒழிய அத்தகைய மீதி இழப்பீட்டுப் பத்திரம்/வாரிசுச் சான்றிதழைப் பெற்ற பிறகு கணக்கு வைத்திருப்பவர்(கள்) வழங்கியுள்ள அறிவுறுத்தலின் அடிப்படையில் பகிரப்படும்.

ஆ )”**இருவரில் ஒருவர் அல்லது உயிர் வாழ்பவர்**” எனும் செயற்பாட்டு அறிவுறுத்தலுடன் பேணப்படும் கணக்குகளைப் பொறுத்த வரை இருவரில் ஒருவர் மரணமடையுமிடத்து கணக்கில் உள்ள பணம் உயிர் வாழும் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும்.

இ) கூட்டுக்கணக்கொன்று ஒரு கையெழுத்துடன் இயக்கப்படும் நிலையில் அடுத்த வாடிக்கையாளரிடமிருந்து வங்கிக்கு முரண்பாடான அறிவுறுத்தல் கிடைக்குமிடத்து நீதிமன்ற ஆணை கிடைக்கும் வரை வங்கி கணக்கை நிறுத்தி வைக்கும்.

ஈ) கையொப்பமிடும் ஏக போக உரிமை கொண்டுள்ள ஒரு தனி வியாபார உரிமையாளர் மரணமடையுமிடத்து அவரது கணக்கில் உள்ள வரவு /செலவு மீதி அவரது சட்டரீதியான வாரிசுக்கு வழங்கப்படும் / அவரிடமிருந்து பெறப்படும்.

உ)கணக்கு வைத்திருக்கும் நிறுவனம் ஒன்றின் பங்காளர் ஒருவர் இறப்பதன் மூலம் அல்லது வேறு விதமாக பங்காளராக அல்லாது வருமிடத்து வங்கி பங்குடமை ஆவணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கும்.

ஊ)ஏனைய கணக்குகளின் செயற்பாடு (மேலே 6 ம் பிரிவில் குறிபிடப்பட்டுள்ளவாறு)அவர்களது யாப்பின் பிரகாரம் நிர்வகிக்கப்படும்

ஏ)மரணம் அல்லது வங்குரோத்து சம்பவித்தமை குறித்து உத்தியோகபூர்வ தகவல் கிடைக்குமிடத்து அல்லது வேறு நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவரும்போது வங்கி கணக்கின் செயற்பாட்டினை உடன் நிறுத்தி வைக்கும்.

8.வங்கி வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் எந்தவொரு சேவைக்குமான சேவைக்கட்டணங்களை வங்கியின் கட்டணங்கள் அட்டவணைப் பிராகாரம் அறவீடு செய்யும். கட்டணங்களில் ஏற்படும் மாற்றங்களை ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது தேவையான போது கட்டணங்கள் அட்டவணை மூலம் வாடிக்கையாளருக்கு வங்கி அறியத்தரும். எனினும் ஏதும் கட்டணக்குறைவு வங்கியின் சுய விருப்பின் பேரில் உடனடியாக அமுல்படுத்தப்படும்.

9.உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரஜைகள், நிறுவனங்கள், அரச /தனியார் நிறுவனங்கள், ஏனைய சட்ட ரீதியான வதிவோர்,வதியாதோர் ஆகிய இரு தரப்பினரிடமிருந்தும் வெளிநாட்டு நாணயப் பணப்பரிமாற்றல்கள் அல்லது வெளிநாட்டு நாணயத்தாள்கள் வைப்புகளாக ஏற்றுக்கொள்ளப்படும். வெளிநாட்டு நாணயம் கையாளும் கட்டணம் போன்ற பல்வேறு கட்டணங்களை வங்கி அதன் கட்டணங்கள் அட்டவணையின்படி வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் இருந்து அறவிடும்.

10. வாடிக்கையாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட மீளப்பெறும் நடவடிக்கைளை விட அதிகமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமிடத்து “கொடுக்கல்

வாங்கல் கட்டணம்” வங்கியின் கட்டணங்கள் அட்டவணைப் பிரகாரம் பெயரிடப்பட்ட உள்நாட்டு நாணயக் கணக்குகளுக்கு ஏற்புடையதாகும்.

11. குறித்த ஆறு மாத காலப்பகுதியில் பரிந்துரைக்கப்பட்ட வரவு மீதியை விடக் குறைவான மீதியை அல்லது மேலே 9 ம் பிரிவில் உள்ள கட்டண அறவீட்டின் பின் பூச்சிய மீதியைப் பேணும் கணக்குகளை உரிய அறிவித்தலை வாடிக்கையாளருக்கு வழங்கியதன் பின்னர் தன் சுய விருப்பின் பேரில் வங்கி மூடிவிடலாம். அது தவிர அதிருப்திகரமானது /விரும்பத்தகாதது என வங்கி கருதும் கணக்குகளை அல்லது KYC / வங்கி நியமங்களை திருப்தி செய்யாத அத்தகைய கணக்குகளையும் மூடும் அருகதையும் வங்கிக்கு உண்டு. மேலும் வாடிக்கையாளருடனான பெட்டகம்/பாதுகாப்பு பெட்டகம், வங்கி விசா வரவு அட்டை ஆகிய தொடர்புகளை துண்டிக்கவும் வங்கிக்கு அருகதை உண்டு.

12. வாடிக்கையாளர் தமது கணக்கை ஒரு வருடம் தொடர்ச்சியாக செயற்படுத்தாதவிடத்து வங்கி அவருக்கு எழுத்து மூல அறிவித்தல் கொடுத்து அக்கணக்கினை செயலற்ற கணக்காக அடையாளப்படுத்தும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் காசோலை / ATM அட்டை மூலம் பணம் மீளப்பெறுவது அனுமதிக்கப்படமாட்டாது.

(ஆ)செயலற்ற கணக்கொன்றை மீளவும் செயற்படுத்த வாடிக்கையாளர் தமது வங்கிக்கிளைக்கு வருகை தந்து எழுத்து மூல விண்ணப்பப்படிவம் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும். அதற்காக அவர் செல்லுபடியான தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டின் மூல ஆவணத்தை அதன் பிரதி உட்பட கிளைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

13.10 வருடங்களுக்கு நடைமுறை /சேமிப்பு /தவணை வைப்புக் கணக்குகள் செயலற்றதாகக் காணப்படின் அத்தகைய கணக்குகளில் உள்ள மீதி **கைவிடப்பட்ட சொத்தாகக்** கருதப்பட்டு இலங்கையின் வங்கிச் சட்டத்தின் படியும் கைவிடப்பட்ட சொத்து தொடர்பான இலங்கை மத்திய வங்கியின் விதிகளுக்கும் அமைவாக இலங்கை மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்படும். வரைவு , கொடுப்பனவுக்கட்டளை, காசோலைகள் போன்றவையும் 10 வருடங்கள் கடந்தும் கொடுப்பனவு செய்யப்படாமல் இருந்தால் அவையும் கைவிடப்பட்ட சொத்தாக கருதப்பட்டு அவற்றின் பொறுப்பும் இலங்கை மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்படும்.

14.பணமாக, காசோலையாக அல்லது வேறு சாதனம் ஊடாக, இலங்கை ரூபா அல்லது வெளிநாட்டு நாணயத்தில் கணக்குகளில் செய்யப்படும் வைப்புகள் ஹபீப் வங்கிக் கிளைகளில் உள்ள வைப்புச் சீட்டுகளை முறையாக பூர்த்தி

செய்து ஒப்படைப்பதன் ஊடாக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். வைப்புச்சீட்டு உங்களது வசதிக்கான ஒரு ஞாபகார்த்த ஆவணமாகும். மேலும் வைப்புச் சீட்டைப் பயன்படுத்துவதன் மூலம் வைப்பாளரும் கணக்கு உரிமையாளரும் குறித்த பணவைப்பு இதில் உள்ள நிபந்தனைகளுக்கு அமைவானது என்பதனை ஏற்றுக்கொள்கின்றனர். வைப்புச் சீட்டு வங்கிக்கணணி மூலம் சான்றுப்படுத்தப்பட்டிருந்தால் அல்லது வங்கி அலுவலர் ஒருவரினால் ஒப்பமிடப்பட்டு வங்கி முத்திரை பதிக்கப்பட்டிருந்தால் மட்டுமே செல்லுபடியாகும்.

15. காசு, காசோலை வைப்புகளுக்கு தனித்தனியான வைப்புச் சீட்டுகள் பயன்படுத்தப்பட வேண்டும்.(காசுக்கும் காசோலைகளுக்கும் ஒரே வைப்புச் சீட்டு பயன்படுத்தப்படக்கூடாது). வெவ்வேறு வங்கிகளின் காசோலையாக இருப்பின் தனித்தனி வைப்புச் சீட்டு பயன்படுத்தப்பட வேண்டும். மேலும், ஹபீப் வங்கி மீது வரையப்பட்ட அதன் கிளைகளில் வைப்புச்செய்யப்படும் காசோலைகள் ஒரே வைப்புச்சீட்டில் பதியப்படலாம்.

16. வைப்புச்சீட்டில் ஏற்படும் தவறான பதிவுகள் வங்கியினால் திருத்தப்படுவதுடன் அது குறித்து வாடிக்கையாளருக்கும் அறிவிக்கப்படும். வாடிக்கையாளர் 7 நாட்களுக்குள் மறுப்பேதும் தெரிவிக்காத பட்சத்தில் திருத்தப்பட்ட வைப்புச்சீட்டை எல்லா வகையிலும் உண்மையானதாக ஏற்றுக்கொண்டதாக கருதப்பட்டு, சரிபார்த்தலுக்குப் பின்னர் காசோலைகள்/சாதனங்கள்
மீளப்பெற்றுக்கொள்ளப்படும்.

17. 13 இலக்கங்கள் கொண்ட பயனாளியின் ஹபிப் வங்கிக்கணக்கிலக்கம் ஒவ்வொரு காசோலையின் பின்புறமும் தெளிவாக எழுதப்பட வேண்டும்

18.கணக்குகளுக்கு வரவு வைக்கப்படும் காசோலைகளுக்கு பெறுபவரின் அங்கீகாரம் அவசியமாகும்

19. தமது கணக்கில் காசோலை/ சாதனம் வைப்புச் செய்யும் இரண்டாவது அல்லது அதன் பின்னரான பெறுபவர் தமது பெயரில் அதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமையை உறுதி செய்து கொள்ள வெண்டும்.

20.தனது சுய விருப்பின் பேரில் எந்த நேரத்திலும் ஏதேனும் காசோலை(கள்)யை மறுக்க அல்லது நிராகரிக்க வங்கிக்கு அதிகாரம் உண்டு.

21.வங்கியினால் வழங்கப்பட்ட அச்சுப்பதித்த காசோலை அல்லது பணமெடுக்கும் சீட்டு மூலம் வாடிக்கையாளர் தமது கணக்கில் இருந்து குறித்த

தொகைப்பணத்தினை மீளப்பெற முடியும் அல்லது வங்கியினால் வழங்கப்படும் ஏனைய மாற்றுவழிகளான வரவு அட்டை (ATM), தொலைபேசி வங்கிச்சேவை,இணைய வழி வங்கிச்சேவை முதலியவற்றையும் பாவிக்கலாம். முறையாக வரையப்படாத காசோலையை மறுக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

22.அ)கணக்கு உரிமையாளர் / அதிகாராமளிக்கப்பட்டவர் மாதிரிக்கையொப்பத்திற்கு ஒப்ப காசோலையில் கையொப்பமிடவேண்டும் அதுபோன்று காசோலையில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களும் வரைபவரின் முழுமையான கையொப்பத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

ஆ) பிந்திய திகதி இடப்பட்ட காசோலை , காலாவதியான காசோலை, ஆறு மாதம் கடந்த காசோலை , தவறான மற்றும் பழுதடந்த காசோலைகள் வங்கியினால் நிராகரிக்கப்படும்.

இ) எழுதிய பின்னர் சேர்த்தல், திருத்தம் செய்வதற்கு இடம் தராத வகையில் காசோலை எழுதப்பட /தயரிக்கப்பட வேண்டும்.

ஈ) வங்கியினால் வழங்கப்பட்ட காசோலைப் புத்தகம், வரவு அட்டை (ATM) என்பவற்றை எப்போதும் பத்திரமாகப் பேண வேண்டியது வாடிக்கையாளரின் பொறுப்பாகும். அவரது ரகசியக் குறியீட்டு எண்ணை (pin) ரகசியமாகக் கையாள்வது வாடிக்கையாளரின் கடமையாகும். காசோலைப் புத்தகம் பத்திரமாக வாடிக்கையாளரின் கண்காணிப்பில் வைக்கப்படுதல் வேண்டும். களவாடப்படுதல், காணாமல் போதல் அல்லது தொலைந்து போதல் காரணமாக இடம்பெறும் துஸ்பிரயோகங்களுக்கு வங்கி பொறுப்பல்ல.

உ)காசோலைப்புத்தகம் தொலைந்ததாக வாடிக்கையாளர் முறைப்பாடு செய்தால் அவரது பணத்திற்குப் பங்கம் ஏற்படாமல் வங்கி தேவையான எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும். வாடிக்கையாளர்கள் ஏதும் இழப்பு அல்லது நட்டத்திற்குப் பொறுப்புக்கூற தேவைப்படுத்தப்பட மாட்டார்.

23.கணக்கில் வரவு வைக்கப்படுவதற்கான காசோலை /சாதனங்கள் வாடிக்கையாளரின் சொந்த இடர் மற்றும் பொறுப்பிலேயே கையாளப்பட வேண்டும். கணக்கு ஆரம்பிக்கும் சமயத்தில் வாடிக்கையாளர் வெளிப்படுத்திய சுய விபரங்களுடன் ஒத்ததாக அந்த நடவடிக்கைகள் இருக்க வேண்டும். காசோலைகளுக்கான பணத்தை வேறு வங்கி, முகவர், உப முகவரிடமிருந்து வசூலிக்கும் விடயத்தில் எதுவித இடர் அல்லது பொறுப்பிலிருந்தும் தவிர்ந்து கொள்வதற்கு வங்கிக்கு சுதந்திரம் உண்டு. காசோலை அங்கீகரிக்கப்பட்ட

பின்னர் காசோலைக்குரிய பணம் கணக்கில் வரவு வைக்கப்படும். வங்கிக்குரிய அல்லது அதன் முகவருக்குரிய கட்டணத்தினை அறவீடு செய்வதற்குரிய அதிகாரத்தை வாடிக்கையாளர் வங்கிக்கு அளிக்கின்றார். முன்னைய அனைத்துக் குறிப்புகளுக்கும் அவற்றின் உண்மைத்தன்மைக்கும் வாடிக்கையாளர் உத்தரவாதமளிக்கின்றார்.

24.காசோலைப் புத்தகம் அச்சிடும் தேவைக்காக வைப்பாளரின் பெயர் மற்றும் கணக்கு இலக்கத்தை பதிப்பகத்திற்கு வழங்க வங்கிக்கு அதிகாரம் உண்டு. காசோலைப் புத்தகம் கிடைத்தவுடன் வாடிக்கையாளர் அதில் உள்ள தாள்களின் எண்ணிக்கையை சரி பார்த்துக்கொள்ள வேண்டும்.

25(அ) காசோலைக்குரிய கொடுப்பனவை அது காணாமல் போதல் அல்லது சட்டம் அங்கீகரிக்கும் வேறு காரணங்களுக்காக நிறுத்தி வைக்குமாறு வாடிக்கையாளரினால் முன் வைக்கப்படும் எழுத்து மூலக்கோரிக்கை வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்படலாம். அதற்கென உள்ள படிவத்தில் காசோலையின் விபரங்கள் அதாவது (1) அதன் இலக்கம் (2) திகதி (3) பணம் பெறுபவர் பெயர் (4) அவரது கணக்கிலக்கம் , காசோலை(கள்) தொலைந்த இடம் என்பன விபரிக்கப்பட வேண்டும்.

ஆ) நிகழ்காலத்தில் அமுலில் உள்ள வங்கிக்கட்டணங்கள் அட்டவணையின் பிரகாரம் காசோலைக் கொடுப்பனவு இடைநிறுத்தல் கட்டணம் அறவிடப்படும்.

26. வங்கி அதன் ஏதேனும் பணிகளை வினைத்திறன் கொண்ட மூன்றாம் தரப்பு முகவரிடம் ஒப்படைக்கலாம். எனினும், வாடிக்கையாளரின் இறைமை மற்றும் தகவல்களின் இரகசியத் தன்மையைப் பாதுகாப்பதற்குரிய ஏற்பாடுகளை வங்கி மேற்கொள்ளும்.

27)வாடிக்கையாளரின் கணக்கின் இரகசியத்தன்மையைப் பாதுகாப்பதற்குரிய எல்லா ஏற்பாடுகளையும் வங்கி மேற்கொள்ளும். இருப்பினும் சம்பந்தப்பட்ட சட்டங்களின் பேரில் உள்ளூர் அல்லது வெளிநாட்டுப் புலனாய்வு நிறுவனங்கள் அல்லது எதேனும் உள்நாட்டு /வெளிநாட்டு அரச நிறுவனங்கள் தகவல் கோரும்போது வாடிக்கையாளரின் சம்மதத்துடன் அவை வழங்கப்படும்.

28) கணக்கு(களின்) அறிக்கை(கள்) வாடிக்கையாளர்களுக்கு மாதாந்த அடிப்படையில் சாதாரண தபால் மூலமும் அரையாண்டு தோறும் பதிவுத்தபால் மூலம் இலவசமாக வழங்கப்படும் /அனுப்பப்படும். பரிந்துரைக்கப்பட்ட தடவைகளுக்கு மேலதிகமான கணக்கு அறிக்கை(கள்)க்கான கட்டணம் வங்கியின் தற்போதைய கட்டணங்கள் அட்டவணையின்படி வசூலிக்கப்படும்.

29. (அ) விநியோக முகவர்களின் தேவைக்காக வாடிக்கையாளர்களின் ஒரு சோடி வதிவிட, தபால் மற்றும் காரியாலய முகவரிகளைத் தரப்படுத்தவும், பராமரிக்கவும் வங்கிக்கு உரிமை உண்டு. இதேபோல், வாடிக்கையாளரிடமிருந்து முகவரி மாற்றத்திற்கான தகவல் கிடைக்கப் பெற்றால், அது அனைத்து விநியோக முகவர்களுக்கும் அறிவிக்கப்படும். புதுப்பிக்கப்பட்ட/ மாற்றப்பட்ட முகவரியின் விபரங்களை வாடிக்கையாளர் வங்கிக்கு தெரிவிக்க/வழங்கத் தவறியதன் காரணமாக நிகழும் தவறான விநியோகத்திற்கு வங்கி பொறுப்பல்ல.

(b) கணக்கறிக்கை கிடைத்து 45 நாட்களுக்குள் ஏதேனும் முரண்பாடு/பிழை இருந்தால் அது குறித்து வங்கிக்கு எழுத்து பூர்வமாக தெரிவிக்கப்படாவிட்டால், அந்த அறிக்கையின் உள்ளடக்கங்கள் வங்கியின் பார்வையில் சரியானதாகக் கருதப்படும். கணக்கு வைத்திருப்பவர்(கள்) தாமாக எத்தகைய பதிவுகளையோ அல்லது மாற்றங்கள்/திருத்தங்களையோ கணக்கு அறிக்கையில் செய்ய வேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(c) கணக்கு அறிக்கை தொலைந்து போனால் அல்லது பழுதடைந்தால், வங்கியின் கட்டணங்கள்

அட்டவணையின் படி கட்டணம் வசூலிக்கப்பட்டு அதன் இணைப்பிரதி வழங்கப்படலாம்.

30.(அ) கணக்கு வைத்திருப்பவரின் பேரில் மட்டுமே வசூலிக்கப்பட வேண்டிய காசோலைகள் மற்றும் பிற சாதனங்களை வங்கி ஏற்கலாம். பயனாளி வாடிக்கையாளரின் கணக்கில் வரவு வைப்பதற்காக வைப்புச் செய்ய முன்னர் அனைத்து சாதனங்களும் குறுக்குக் கோடிடப்பட வேண்டும்.

ஆ)காசோலை /வேறு சாதனைங்களுக்குரிய பணத்தை வசூல் செய்ய வங்கி தன்னாலான சகல முயற்சிகளையும் முடிந்தளவு கவனமாகவும் விரைவாகவும் மேற்கொள்ளும். காசோலைகளை வசூல் செய்வதில் தாமதம் ஏற்படல் அல்லது தொலைந்து போதல் சம்பவித்தால் காசோலையை வரைந்த தரப்பினருடன் தொடர்பு கொண்டு சுமுகமாக தீர்வு காணப்படும். எனினும் தனது கட்டுப்பாட்டிற்குள் இல்லாத எதேனும் காரணமாக ஏற்படும் தாமதம் அல்லது தொலைதல் போன்றவற்றுக்கு வங்கி பொறுப்பேற்க மாட்டாது.

(இ) அனுமதிக்கப்படாத சாதனங்கள் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தாலும் வங்கிக்கு எதிராக கொண்டுவரப்பட முடியாது. அத்தகைய சாதனங்கள் வரவு

வைக்கப்பட்டாலும் மற்றும் / அல்லது வங்கிக்கு எதிராக கொண்டுவர அனுமதிக்கப்பட்டாலும் , வாடிக்கையாளரின் கணக்கில் செலவு வைக்கும் (டெபிட்) உரிமை வங்கிக்கு உண்டு.

(ஈ) கணக்கு வைத்திருப்பவர்களால் வைப்புச்செய்யப்பட்டு நிராகரிக்கப்பட்ட காசோலைகள் மற்றும் பிற ஆவணங்கள் வாடிக்கையாளரிடம் நேரில் கையளிக்கப்படும் அல்லது பதிவுத்தபால் அல்லது விநியோக சேவை நிறுவனங்கள் மூலம் வங்கியில் கடைசியாக பதிவுசெய்யப்பட்ட வாடிக்கையாளரின் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

(உ) வைப்புச் செய்யப்பட்ட சாதனம் ஒன்று ஏதேனும் காரணத்திற்காக நிராகரிக்கப்பட்டால் அல்லது செலுத்தியதாக முன்னர் அறிவிக்கப்பட்ட பின்பு மீண்டும் நிராகரிக்கப்படின் அச்சாதனத்தின் பெறுமதியை கணக்கு வைத்திருப்பவர் திரும்ப ஒப்படைக்க வேண்டும் மற்றும் ஏற்படும் அனைத்து இழப்புகள் மற்றும் செலவுகளுக்கு எதிராக வங்கிக்கு இழப்பீடு வழங்கவேண்டும். கணக்கு வைத்திருப்பவர் வங்கியில் வைத்திருக்கும் எந்தக் கணக்கிலிருந்தும் அத்தகைய தொகை மற்றும் செலவுகளை அறவீடு செய்ய வங்கிக்கு அங்கீகாரம் வழங்க வேண்டும். தேவையாயின் வங்கியின் கோரிக்கையின் பேரில் கணக்கு வைத்திருப்பவர் மேலதிக தொகையைக் கணக்கில் வைப்புச் செய்ய வேண்டும்.

31.வாடிக்கையாளர்களின் கணக்குகளில் வரவு செலவுப் பதிவுகள் சரியாக மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்த வங்கி அனைத்து சாத்தியமான முன்னெச் சரிக்கைகளையும் எடுக்கும், எனினும் ஏதேனும் தவறு ஏற்படின் வங்கி அதன் அதிகாரத்திற்குட்பட்டு அவசியமான சீராக்கல் பதிவுகளை மேற்கொண்டு அவசியமாயின் வாடிக்கையாளருக்கும் அறிவித்து அவரிடமிருந்து பெறவேண்டிய பணத்தை மீளப் பெற்றுக்கொள்ளும்.

32. வாடிக்கையாளரின் முகவரியில் அல்லது யாப்பில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால் உடனடியாக வங்கிக்குத் தெரிவிக்கவேண்டும்.

33. கணக்கை முடிவுறுத்தி மீதித் தொகையைப் பெற விரும்பும் வாடிக்கையாளர்கள் பயன்படுத்தப்படாத எல்லாக் காசோலைகளையும் வங்கியிடம் மீளக் கையளிக்க வேண்டும், அல்லது பயன்படுத்தப்படாத காசோலைகள் அழிக்கப்பட்டுவிட்டன என்பதை எழுத்து பூர்வமாக வங்கிக்கு திருப்தி ஏற்படும் வகையில் உறுதிப்படுத்த வேண்டும். ஹபிப் வங்கியின் டெபிட் அட்டை(கள்) வழங்கப்பட்டிருந்தால் அவை மீள ஒப்படைக்கப்பட வேண்டும். பெட்டகம் / பாதுகாப்புப் பெட்டியுடன் தொடர்புடைய உறவுகள் அனைத்தும் நிலுவைத் தொகை செலுத்தப்பட்டு முடிவுறுத்தப்பட வேண்டும்.

34. ஒரு வாடிக்கையாளர் தனது ஹபிப் வங்கிக் கணக்கை வங்கியின் வேறொரு கிளைக்கு மாற்ற விரும்பினால் உரிய அனைத்து நடைமுறைகளையும் பூர்த்தி செய்த பிறகு அவரது பழைய கணக்கினை மூடி அவர் விரும்பும் கிளையில் ஒரு புதிய கணக்கைத் தொடங்க வேண்டும். வட்டியுடன் கூடிய மீதி , புதிய கணக்கிற்கு கட்டணம் ஏதுமின்றி இலவசமாக மாற்றப்படும்.

35. குறித்த வங்கிக்கிளை மூடப்படல்/இணைக்கப்படல் போன்ற காரணங்களின் பேரில் வாடிக்கையாளர் தமது கணக்குகளை வங்கியின் வேறு கிளைக்கு வட்டிக்கு பாதகமின்றி மாற்றலாம், கணக்கு மாற்றப்படும் திகதியன்று கணக்கில் வரவு வைக்கப்படாத வாடிக்கையாளருக்கு கிடைக்க வேண்டிய திரட்டிய தொகை புதிய கிளைக்கு மாற்றப்படும்.

36. இலங்கை ரூபாவில் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் மேற்கொள்ளப்படும் சகல வைப்புகள் மற்றும் கொடுப்பனவுகள் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கு அமைவானதாக இருக்க வேண்டும். வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட , அரசாங்க உத்தரவு, சட்டம், வரி விதிப்பு, கட்டணம், பொருளாதாரத்தடை, நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாடு, தடைக்காலம் அல்லது வேறு ஏதாயினும் காரணங்களால் வாடிக்கையாளரினால் வைப்புச்செய்யப்பட்ட நிதிக்கு ஏற்படும் இழப்பு அல்லது நட்டத்திற்கு வங்கி பொறுப்பாகாது.

37. இந்த 'விதிமுறைகளில்' உள்ள விதிகளுக்கு முரணாக ஏதும் விதிகள் இருந்தபோதிலும், ஒரே தேசிய அடையாள அட்டையின் கீழ் உள்ள ஒரு வாடிக்கையாளரின் அனைத்து அல்லது ஏதேனும் வாடிக்கையாளர் தொடர்புகளை வங்கி தனது சுய விருப்பத்தின் பேரில் ஒருங்கிணைக்க, கூட்டிணைக்க மற்றும் /அல்லது ஒன்றிணைக்க வங்கிக்கு உரிமை உண்டு. அத்தகைய சந்தர்ப்பத்தில் கணக்கு வைத்திருப்பவருக்கு தகுந்த முன்னறிவிப்பை வங்கி வழங்கும். ஒருங்கிணைக்க, கூட்டிணைக்க மற்றும்/அல்லது ஒன்றிணைப்பதற்கான உரிமையானது, சம்பந்தப்பட்ட நாணய அலகை அல்லது நாணயங்களைப் பொருட்படுத்தாமல் வாடிக்கையாளரின் கணக்குகளில் வங்கிக்கு ஏற்படும் செலவுகளைச் சீர் செய்வதற்கான அல்லது செலுத்துவதற்கான வங்கியின் உரிமையையும் உள்ளடக்கும். அத்தகைய ஒருங்கிணைப்பு, ஒன்றிணைப்பு அல்லது கூட்டிணைப்பின் பேரில் வங்கிக்கு கிடைக்க வேண்டிய தொகையில் ஏதும் பற்றாக்குறை அல்லது குறைபாடு ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட கணக்கு வைத்திருப்பவர் வங்கியின் கோரிக்கையின் பேரில் அதைச் செலுத்துவதற்குக் கடமைப்பட்டுள்ளார்.

38. கணக்கு வைத்திருப்பவரின் கோரிக்கையின் பேரில் வங்கி ஏதேனும் பொறுப்பை ஏற்றுக்கொண்டால் வங்கி வசம் உள்ள கணக்கு வைத்திருப்பவருக்குச் சொந்தமான அனைத்து வகையான நிதிகள், பணம், பத்திரங்கள் மற்றும் பிற சொத்துக்கள் மீது வங்கிக்கு பாத்தியதை உண்டு. கணக்கு வைத்திருப்பவர் கடனை செலுத்தத் தவறும்போது தகுந்த அறிவித்தலுடன், உசிதமானது என வங்கி கருதும் சொத்துக்கள்/ஆதனங்களை விற்பனை செய்வதன் ஊடாகக் கிடைக்கும் வருவாயைக் கொண்டு கணக்கு வைத்திருப்பவருக்கு எதிராக அறவிடவேண்டிய அனைத்து நிலுவைத் தொகைகளும் அறவிடப்படும்.

39. ஒரு குறிப்பிட்ட நாளிலோ அல்லது எந்த ஒரு காலகட்டத்திலோ வங்கி அதன் கிளைகள் ஊடாக எந்த ஒரு சேவையையும் வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கச் செய்வதிலிருந்து தடுக்கும் மின்சாரக்கோளாறு , அல்லது கணனிகள் செயலிழப்பு அல்லது அதன் கட்டமைப்புகள் அல்லது உபகரணங்களில் ஏற்படும் கோளாறுகளுக்கு வங்கி எந்தப் பொறுப்பையும் அல்லது உரிமை கோரலையும் ஏற்காது.

40. (அ) சேமிப்பு/தவணை வைப்புகள் மீதான இலாபத்தைக் கணக்கிடும் முறையானது சரிஆ சட்டங்கள் , கொள்கைகளுக்கு அமைவானது.

(ஆ) சேமிப்பு/ தவணை வைப்புகளுக்குக் கிடைக்க வேண்டிய இலாபம் வங்கியின் தீர்மானப்படி ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டதும் மற்றும் கிளைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள இலாபப்பங்கு பகிர்ந்தளிக்கும் விகிதத்தில் கணக்குகளில் வரவு வைக்கப்படும். இலாபம் செலுத்தப்பட வேண்டிய காலம் நிறைவடைந்த பின்னர் குறுகிய கால எல்லைக்குள் இலாபம் கணக்குகளில் வரவு வைக்கப்படும்.

41. இலங்கை ரூபாயிலான தவணை வைப்புகளை முதிர்வுக்கு முன் பணமாக்கினால், சேமிப்புக் கணக்கிற்கான தற்போதைய இலாப விகிதமே வங்கியால் செலுத்தப்படும். இதே ஏற்பாடு வெளிநாட்டு நாணயத் தவணை வைப்புகளுக்கும் பொருந்தும் மற்றும் நிலவும் வெளிநாட்டு நாணய சேமிப்புக்கணக்குகளுக்குரிய இலாப வீதம் இதற்குப் பயன்படுத்தப்படும்.

42. நடைமுறையில் உள்ள வருமான வரிச் சட்டங்களின்படி இலாபத் தொகையிலிருந்து நிறுத்திவைத்தல் வரி வசூலிக்கப்படும்.

43. (அ) அனைத்து வெளிநாட்டு நாணயக் கணக்குகளும் அவ்வப்போது இலங்கை மத்திய வங்கி வெளியிடும் வெளிநாட்டு பரிவர்த்தனை விதிமுறைகள் மூலம் நிர்வகிக்கப்படும்.

(ஆ) மத்திய வங்கியின் வெளிநாட்டுப் பரிவர்த்தனை விதிமுறைகளின்படி கணக்குகளின் வகையைப் பொறுத்து, வங்கியின் தற்போதைய நாணய மாற்று விகிதத்தில் வைப்பாளரின் விருப்பப்படி, வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாயில் பணம் எடுப்பதன் மூலம் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் இயக்கப்படலாம்.

(இ) ஒவ்வொரு வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனையும் வாடிக்கையாளர்களால் முழு விழிப்புணர்வுடன் மேற்கொள்ளப்படும், வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைகள்,பரிமாற்றல் இடர்களுக்கு வங்கி பொறுப்பேற்காது.

(ஈ) வங்கிக்கு எதிராகக் கொண்டுவரப்படும் எந்தவொரு உரிமை கோரல்களுக்கும் பிரத்தியேக அதிகார வரம்பு இலங்கை, கொழும்பில் உள்ள தகுதிவாய்ந்த நீதிமன்றமாகும்.

44.அரசாங்க வரிகள்/கலால் தீர்வைகள் நடைமுறையில் நிலவும் விகிதங்களின்படி வாடிக்கையாளர்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

45. வங்கியின் சொந்த தானியங்கி காசு இயந்திரங்களில் (ஏடிஎம்களில்) இருந்து கட்டணமின்றி பணம் மீளப் பெற அனுமதிக்கப்படும், ஆனாலும் வேறு வங்கிகளின் ஏடிஎம்கள் மூலம் செய்யப்படும் பரிவர்த்தனைகளுக்கான கட்டணங்களை வங்கி அறவிடும்.

46. ஹபிப் வங்கியின் விசா டெபிட் அட்டைகள் தனிப்பட்ட (ஒற்றைக் கையொப்பமிடும் ஆணை கொண்ட கூட்டுக்கணக்கு உட்பட) வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே வழங்கப்படும் மற்றும் அவர்களிடமிருந்து டெபிட் அட்டைக்குரிய கட்டணம் வசூலிக்கப்படும் அதன் பின்னர் ஆண்டுதோறும் புதுப்பித்தல் கட்டணம் வசூலிக்கப்படும்.

47. வாடிக்கையாளர்கள் தங்கள் கணக்கை/கணக்குகளை ஹபிப் வங்கியின் எந்தக்கிளையின் ஊடாகவும் அணுகலாம். மேலும் கிளை வலையமைப்பின் ஊடாக நகரம் அல்லது நகரங்களுக்குள் நிகழ்நேர நிதிப் பரிமாற்றத்தினையும் மேற்கொள்ளலாம்.

48. குறிப்பிட்ட விதிமுறைகள் பல்வகைக்கணக்கு (கள்), மற்றும் அனைத்துப் பிற சேவைகள் , தவணை வைப்புகள், வைப்புத் திட்டங்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு அவ்வப்போது வழங்கப்படும் சேவைகள் சம்பந்தமாக

அமுலில் உள்ள நிபந்தனைகள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள், நடைமுறைகள் ஆகியவற்றிற்கு மேலதிகமானவையே தவிர பதிலீடுகள் அல்ல.

49. கணக்கு வைத்திருப்பவர், வெளிநாட்டில் நிரந்தரமாக வசிப்பதற்காக நாட்டை விட்டு வெளியேறும்போது அது பற்றி வங்கிக்கு உடனடியாக தகவல் வழங்க வேண்டும். அவரது கணக்கு வதியாதோர் கணக்காக மாற்றியமைக்கப்படும். மேலும், அனைத்து வைப்புகள் மற்றும் மீளப் பெறுதல்கள் இலங்கை மத்திய வங்கி வதியாதோர் கணக்குகள் தொடர்பாக அவ்வப்போது வெளியிடும் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்

50. எந்தக் காரணமும் தெரிவிக்காமல் கணக்கைத்திறக்க மறுக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

51. திருத்தத்தின் தன்மையைப் பொறுத்து, கிளையின் விளம்பரப்பலகை, கணக்கறிக்கை, பத்திரிகை விளம்பரம் என்பவற்றின் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு அறிவூட்டல் செய்த பின்னர், ஏதேனும் புதிய விதியைச்சேர்க்க அல்லது அனைத்து விதிகளையும் திருத்துவதற்கான உரிமையை வங்கி தன் வசம் கொண்டுள்ளது. திருத்தத்தின் தன்மையைப்பொறுத்து வாடிக்கையாளர் விலக விரும்பினால் அவருக்கு 30 நாட்கள் போதிய அவகாசம் வழங்கப்படும்.

52. கணக்குத் திறப்புப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு வங்கியின் விளக்கம் இறுதியானதும் மற்றும் பின்பற்றப்பட வேண்டியதுமாகும் எனினும் ஏதேனும் முரண்பாட்டுடன் சம்பந்தப்பட்ட விடயம் இலங்கை மத்திய வங்கிக்கு முன்வைக்கப்படும். மத்திய வங்கியின் முடிவு இறுதியானதும் மற்றும் பின்பற்றப்பட வேண்டியதுமாகும்.

53.நடைமுறைக்கணக்குகளில் வைப்புகள் **“கர்த்”** அடிப்படையிலேயே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. வங்கிக்கணக்குகளில் வைப்புச்செய்யப்பட்டுள்ள நிதியை அதன் சுய விருப்பின்பேரில் இஸ்லாமிய சரிஆ வுக்கு உகந்த தொழில் முயற்சிகளில் முதலீடு செய்யும்

54.இலங்கை ரூபாய் மற்றும் வெளிநாட்டு நாணயங்களிலான நடைமுறைக்கணக்குகளில் காணப்படும் மீதிகளுக்கு இலாபம் வழங்கப்பட மாட்டாது.

55. நடைமுறைக்கணக்குகளுக்கு மேலதிகப்பற்று வசதிகள் வழங்கப்படமாட்டாது.

56. சேமிப்பு மற்றும் தவணை வைப்புத்திட்டங்களின் கீழான அனைத்து வைப்புகளும் முதரபா அடிப்படையிலேயே ஏற்றுக்கொள்ளப்படும். வங்கி தனது சுய விருப்பின் பேரில் ஒரு முதலீட்டாளராக வியாபாரமொன்றில் ஈடுபடலாம்.

57.சேமிப்புக்கணக்குகளில் மேற்கொள்ளப்படும் வைப்புகள் வங்கியின் சரிஆ ஆலோசகரின் அனுமதியுடன் இஸ்லாமிய சரிஆ விதிகளுக்கு அமைவான வங்கியின் தொழில் முயற்சிகளில் முதலீடு செய்யப்படும்.

58.சேமிப்புக்கணக்கு மீதிகளுக்கான இலாபம் அத்தகைய மீதி வைப்புக் குழுமத்தில் இருந்த காலப்பகுதியுடன் தொடர்புபட்டதான ஒரு அளவீட்டின் அடிப்படையில் கணிக்கப்படும். காலத்துக்குக் காலம் வங்கி இலாபக்கணிப்பை மேற்கொள்ளப் பயன்படுத்தும் அத்தகைய ஒரு அளவீட்டை மாற்றியமைக்கும் அருகதையைத் தன்வசம் கொண்டுள்ளது. நடப்பு அளவீடு கிளையில் கிடைக்கும் மேலும் கிளை வளாகத்தில் உள்ள அறிவித்தல் பலகையிலும் , வங்கியின் இணையத் தளத்திலும் காணப்படும். கோரிக்கையின் பேரில் பிரதிகள் வங்கியால் வழங்கப்படும்

59. தவணை வைப்புகள் “வட்டிதவிர்ந்த” முதரபா தத்துவத்தின் அடிப்படையிலான முதலீடுகள் ஆகும். வங்கி தனது சுய விருப்பின் பேரில் ஒரு முதலீட்டாளராக வியாபாரமொன்றில் ஈடுபடலாம்.

60. சேமிப்புக்கணக்கு மீதிகளுக்கான இலாபம் அத்தகைய மீதி வைப்புக் குழுமத்தில் இருந்த காலப்பகுதியுடன் தொடர்பு பட்டதான ஒரு அளவீட்டின் அடிப்படையில் கணிக்கப்படும். காலத்துக்குக் காலம் வங்கி இலாபக்கணிப்பை மேற்கொள்ள பயன்படுத்தும் அத்தகைய ஒரு அளவீட்டை மாற்றியமைக்கும் அருகதையைத் தன்வசம் கொண்டுள்ளது. நடப்பு அளவீடு இலாப சக்கரம் ஆரம்பமாவதற்கு முன்னர் பிரசுரிக்கப்படும்

61.முதிர்ச்சிக்கு முன் மீவங்கியில் இருந்து மீளப்பெறப்படாது என்ற நிபந்தனையின் கீழான தவணை வைப்புகள் இலாபம் மற்றும் நட்டத்தில் பங்கு பெறத் தகுதி பெறும். வைப்புச்செய்து ஒரு மாதம் நிறைவடைய முன்னதாக தனது வைப்பை மீளப்பெற விரும்பும் முதலீட்டாளர் இலாபப் பங்கு பெறும் தகுதியை இழப்பார் ஆனால் குறித்த வைப்பு வங்கியில் இருந்த காலப்பகுதியில் வங்கிக்கு நட்டம் ஏற்பட்டிருப்பின் அதனைப்பகிர வேண்டிய கடப்பாட்டிலிருந்து அவர் விடுவிக்கப் படுவார். வைப்பின் பின் ஒரு மாதம் கடந்த நிலையில் முதிர்ச்சிக்கு முன்னதாக வைப்பு மீளப்பெறப்பட்டால் அந்த வைப்பு சேமிப்புகணக்குகளுக்குரிய இலாபப் பங்கு வீதத்தில் இலாபம் பெறத் தகுதி பெறும். வங்கி வாடிக்கையாளருக்குரிய வித்தியாசத்தை அவருக்கு கொடுக்கும்

அல்லது அவரது கணக்கில் வரவு வைப்பதன் ஊடாக அறவிடும் அல்லது வங்கியின் கோரிக்கையின் பேரில் வைப்பாளர் உடனடியாக அதனை மீளச் செலுத்த வேண்டும் .

62.பொதுவாக தவணை வைப்புகளுக்கான இலாபம் அல்லது நட்டம் முதிர்ச்சியின் போதே வழங்கப்படும். எனினும், வைப்பாளர் விரும்பினால் அரையாண்டு அடிப்படையில் வழங்கப்படலாம்.

63.வங்கியின் மொத்த வியாபார வருமானத்தின் மீது முன்னதாகத் தீர்மானிக்கப்பட்ட வீத அடிப்படையில் இலாபத்தைப் பங்கு வைக்கலாம்(முதலீட்டாளரின் பங்கு). முதலீட்டாளரின் பங்கு காலத்திற்குக்காலம் மறுபடலாம். அதன் விபரங்கள் இலாபச் சக்கரம் தொடங்க முன்னர் கிளையில் காட்சிப்படுத்தப்படும். மேலும் கிளை வளாகத்தில் உள்ள அறிவித்தல் பலகையிலும் , வங்கியின் இணையத் தளத்திலும் காணப்படும். கோரிக்கையின் பேரில் பிரதிகள் வங்கியால் வழங்கப்படும்

64.சேமிப்பு மற்றும் தவணை வைப்புகளுக்கான இலாபம் கணிக்கும் முறை நடைமுறையில் உள்ள விதிமுறை , வங்கியின் உள்ளகக் கொள்கைகள், நிர்வாக விதிகள் மற்றும் சரிஆ கொள்கைகளினால் ஆளுகை செய்யப்படும்.

65.நிகர இலாபம் பங்கீடு செய்யும் விகிதம் சகல நேரடி செலவுகளையும் கழித்த பின் தீர்மானிக்கப்படும். நட்டம் ஏற்பட்டால் வங்கியும் (முதலீட்டாளராக) , வைப்பாளரும் இணைந்து அவரவர் முதலீட்டின் அடிப்படையில் அதனைப் பகிர்ந்து கொள்வர். முதரிப் என்ற அடிப்படையில் வங்கி நிதி சார் நட்டங்களைப் பொறுப்பேற்காது ஆனாலும் முதரிபின் பங்கைப் பொறுப்பேற்கும்.

66. நீண்ட காலத் தவணை வைப்புகளுக்கு அதிக இலாபப் பங்கு விகிதம் வழங்கப்படும். வைப்புக்காலம் நிறைவடைந்ததும் வைப்புகள் முதரபா குழுவிலிருந்து இலாபப் பங்கு பெறுவதற்குரிய தகுதியை இழக்கும்.

67. முதலீட்டு வைப்புக் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு அவர்களது முதலீட்டின் பேரில் குறித்த ஒரு மட்டத்திலான இலாபத்தினைப் பேணுவதற்காக சரிஆ ஆலோசகர்களினதும் மற்றும் முகாமையினதும் அனுமதியுடன் முதரபா வைப்பாளர்களுக்கு இலாபப்பங்கு பகிரப்பட முன்னர் இலாபம் சீராக்குதல் ஒதுக்கு நிதிக்கு குறித்த ஒரு தொகையை ஒதுக்கீடு செய்வதற்கு முதரபா வைப்பாளர்கள் வங்கிக்கு தமது சம்மதத்தை தெரிவிக்கின்றனர்.

68. நிதி முதலீடுகள் சம்பந்தமான தீர்மானம் எடுத்தல் அல்லது வங்கியின் முகாமைத்துவ செயற்பாடுகளில் வைப்பாளர் பங்கேற்க முடியாது.

69. இலாபம் அல்லது நட்டமாக வங்கி ஒதுக்கீடு செய்யும் தொகை இறுதியானதும் எல்லா வைப்பாளர் மீதும் கடப்பாடு கொண்டதுமாகும். எந்தவொரு வைப்பாளரோ அல்லது அவர் சார்பாக வேறு எவருமோ இலாப நட்டங்கள் பகிரப்பட்ட விதம் குறித்து வங்கியைக் கேள்விக்குட்படுத்த முடியாது.

70. FATCA சட்டத்தின் கீழ் உரிய தகவலை வழங்க விரும்பாத விண்ணப்பதாரருக்கு கணக்கைத் திறக்க / வாடிக்கையாளர் உறவை ஆரம்பிக்க மறுக்கும் உரிமை, வெளிநாட்டு வரிப் படிவங்களை சமர்ப்பித்தல் அடங்கலாக, வங்கிக்கு உள்ளது. வாடிக்கையாளரின் கணக்குகள் சம்பந்தமான தகவல்களை, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏதேனும் வெளிநாட்டு ஒழுங்குபடுத்தும் அதிகார சபைகள் அல்லது வரி அதிகாரசபைகள் (அல்லது அவர்களின் பிரதிநிதிகள் அல்லது ஏதேனும் முகவர்கள்) அல்லது வங்கி அவசியமானது எனக் கருதும் பிற அதிகாரசபைக்கு அல்லது நியாயாதிக்க சபைக்கு வழங்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

71. கையொப்பமிடப்பட்ட தொலைநகல் / மின்னஞ்சல் மூலம் இழப்பீட்டை உறுதிசெய்யும் கணக்கு வைத்திருப்பவர்(கள்) பின்வருவனவற்றுக்கான கடப்பாடுகளை பொறுப்பேற்க வேண்டும்:-

அ) நிபந்தனை ஏதுமின்றி வங்கி செயற்படலாம் என்ற கோரிக்கை சகிதம் வாடிக்கையாளரினால் அனுப்பப்பட்டுள்ளது என வங்கி நம்பும் தொலைநகல் /மின்னஞ்சலின் பேரில் அல்லது வங்கியின் ஆணையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்குவதாக நியாயமாக நம்பக்கூடிய சந்தர்ப்பத்தில், வங்கி அதன் சுய விருப்பத்தின் பேரில் நடவடிக்கை எடுக்கலாம்.

(ஆ) வாடிக்கையாளர் சார்பாக செய்யப்பட்டதாகக் கூறப்படும் மின்னஞ்சல்/தொலைநகல் அறிவுறுத்தல்களை அனுப்பும் நபர் அல்லது நபர்களின் அடையாளத்தை சரிபார்க்கும் கடமைப்பாடு அல்லது அத்தகைய அறிவுறுத்தல்களின் உண்மைத்தன்மையை சரிபார்க்கும் கடமைப்பாடு வங்கிக்குக் கிடையாது. எந்தவொரு மின்னஞ்சல் அறிவுறுத்தலின்படியும் மேற்கொள்ளப்படும் எந்தவொரு பரிவர்த்தனைக்கும் வாடிக்கையாளரே பொறுப்புக்கூற வேண்டும்.

இ) வாடிக்கையாளரால் அனுப்பப்பட்ட மின்னஞ்சல்/தொலைநகல் அறிவுறுத்தல் என வங்கி ஏற்றுக்கொண்டு அத்தகைய அறிவுறுத்தல்களின் பேரில் செயற்படும்போது, அது வாடிக்கையாளரால் எழுத்து மூலம் உறுதிப்படுத்தப் பட்டாலோ, படாவிட்டாலோ, நேரடியான அல்லது மறைமுகமான வங்கியின் அனைத்துச் செயல்கள், நடவடிக்கைகள், உரிமைகோரல்கள், இழப்பு, நட்டம் , கிரயம் மற்றும் செலவுகளுக்கு எதிராக எப்போதும் வங்கிக்கு இழப்பீடு வழங்க வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார் மற்றும் உறுதியளிக்கிறார்.

72.கணக்கு வைத்திருப்பவர் தாம் கணக்கை ஆரம்பித்த அல்லது நடைமுறைப்படுத்துகின்ற கிளை தொடர்பாக வங்கிக்கு எதிராக (அவர்/அவள்/அவர்கள்) உரிமைக்கோரிக்கை எதனையும் கொண்டுவர விரும்பினால் வங்கியின் பதிவு செய்யப்பட்ட இலங்கைக் காரியாலயத்திற்கு எதிராக மட்டுமே கொண்டு வரலாம் என்பதனை கணக்கு வைத்திருப்பவர் இத்தால் புரிந்து கொண்டுள்ளார், ஏற்றுக்கொள்கிறார் மற்றும் உடன்படுகிறார்.

எது எவ்வாறு இருந்தபோதிலும், இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் உள்ள கடப்பாடுகள் ஹபீப் வங்கி லிமிடெட்டின் இலங்கைக் கிளை அலுவலகத்திற்கு மட்டுமே பொருந்தும் என்பதைக் கணக்கு வைத்திருப்பவர் ஒப்புக்கொள்கிறார், புரிந்துகொண்டுள்ளார் மற்றும் ஏற்றுக்கொள்கிறார்.

கணக்கு வைத்திருப்பவரால் அவரது நடைமுறைக்கணக்கில் அல்லது சேமிப்புக் கணக்குகளில் மேற்கொள்ளப்படும் வைப்புகள் அல்லது வங்கிக்கும் அவருக்குமிடையே உள்ள எந்தவொரு வங்கித் தொடர்புகள் மீதான வங்கியின் கடப்பாடுகள்:-

(i) ஹபிப் வங்கி, இலங்கையுடன் மட்டுமே இருக்கும் (ii) அத்தகைய கணக்குகளில் வைப்புச்செய்யப்பட்ட தொகைக்கு(களுக்கு) மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும் மற்றும் (iii) ஹபீப் வங்கி லிமிடெட்டின் இலங்கையில் உள்ள உரிய கிளைகளின் கருமபீடங்களிலிருந்து மட்டுமே செலுத்தப்பட வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஹபிப் வங்கி லிமிடெட் (பாகிஸ்தான்) அல்லது அதன் பிற சர்வதேசக் கிளை அலுவலகங்கள் கணக்கு வைத்திருப்பவர் மீதான வங்கியின் கடப்பாடுகளுக்கு பொறுப்பாகாது.

73. விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் பதிப்புகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு/முரண்பாடுகள் காணப்பட்டால் ஆங்கில விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளே இறுதியானதும் , கட்டுப்படுத்துவதாகவும் அமையும்.

74. இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் கையொப்பமிடுவதன் மூலம், நீங்கள் ஹபிப் வங்கியின் விசா ( VISA) டெபிட் அட்டை மற்றும் ஹபிப் வங்கியின் இணையத்தள வங்கிச்சேவைகளுக்கும் சந்தாதாரராக ஒப்புக்கொண்டுள்ளீர்கள். இந்தச் சேவைகளை நிர்வகிக்கும் வங்கியின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் பிரதிகள் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன, மேலும் அந்த விதிகள், நிபந்தனைகள் உங்களால் கையொப்பமிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி, உங்கள் ஹபிப் வங்கி டெபிட் அட்டை வரவேற்புப் பொதியை உங்கள் தபால் முகவரியில் நீங்கள் பெறுவீர்கள். ஹபிப் வங்கி இணைய வங்கிச்சேவைகளைப் பயன்படுத்துவது தொடர்பாக நீங்கள் வழங்கிய மின்னஞ்சல் முகவரியின் ஊடாக ஹபிப் வங்கியின் கூடுதல் விவரங்களை நீங்கள் பெறுவீர்கள்.

ஹபிப் வங்கி விசா (VISA) டெபிட் அட்டை மற்றும் ஹபிப் வங்கியின் இணையத்தள வங்கிச்சேவைகளுக்கு தாமாகவே சந்தாதாரராகிய போதும் வங்கிச் சேவைகள் ஒவ்வொன்றும் குறித்து உங்களுக்குத் தெரிவிக்கப்படும் செயல்முறையை நீங்கள் தனித்தனியாகச் செயல்படுத்த வேண்டும். நீங்கள் ஹபிப் வங்கியின் விசா ( VISA) டெபிட் அட்டைக்கு சந்தாதாரராக விரும்பாத பட்சத்தில் டெபிட் அட்டை அதன் காந்தப்புல நாடா மற்றும் மின்னணு சிப் ஊடாக வெட்டப்பட்ட நிலையில், எழுத்து பூர்வ விண்ணப்பத்துடன் உங்கள் ஹபிப் வங்கி கிளையில் ஒப்படைக்கவும். நீங்கள் விரும்பினால் தபால் மூலம் அதனை உங்களது கிளைக்கு அல்லது முகாமையாளர், அட்டை நடவடிக்கைகள், 140-142, 2 ம் குறுக்குத் தெரு, ஹபிப் வங்கி , கொழும்பு -11 எனும் முகவரிக்கு நேரடியாகவும் அனுப்பலாம். ஹபிப் வங்கியின் இணையவழிச் சேவைகளில் இருந்து நீங்கள் விலக விரும்பினால் உங்களது கிளைக்கு எழுத்து மூலமாக அறியத்தரவும். மேலும், தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்கள் ஊடாக வாடிக்கையாளர் பிரதிநிதிகளை தொடர்பு கொள்ளுமாறு உங்களை ஊக்குவிக்கிறோம்.

75. தேவையானபோது முதரபா அடிப்படையிலான வைப்புகள் முதரபா குழுமத்தினிடையே உள்ள நடைமுறை வைப்பு நிதி உட்பட்ட வேறு கணக்குகளில் காணப்படும் நிதிகளுடன் ஒன்றிணைக்கப்படலாம்.

76. முதலீட்டு வைப்புக் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு அவர்களது முதலீட்டின் பேரில் குறித்த ஒரு மட்டத்திலான இலாபத்தினைப் பேணுவதற்காக சரிஆ ஆலோசகர்களினதும் மற்றும் முகாமையினதும் அனுமதியுடன் முதரபா வைப்பாளர்களுக்கு இலாபப்பங்கு பகிரப்பட முன்னர் இலாப சீராகுதல் ஒதுக்கு நிதிக்கு குறித்த ஒரு தொகையை ஒதுக்கீடு செய்வதற்கு முதரபா வைப்பாளர்கள் வங்கிக்கு தமது சம்மதத்தை தெரிவிக்கின்றனர்.